**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**16.12.2025**

OS. No.257/2010

பக்கம் – 4

PW1 – பிரேமா

**மூன்றாம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 1958 ஆம் ஆண்டு பிறந்தேன். 1974 ஆம் ஆண்டு குடும்ப தொழில் மூடப்பட்டது என்றால் சரிதான். 1977 ஆம் ஆண்டு குடும்பத்தில் என்ன நடந்தது என்று தற்போது ஞபாகமில்லை. 1977 ஆம் ஆண்டு என்னுடைய இரண்டாவது சகோதரர் இரண்டாம பிரதிவாதி அரிநாத்திற்கு திருமணம் நடைபெற்றது. என்னுடைய தந்தை பெற்ற கடனை அவருடைய நகைகளை விற்று தீர்த்தார். என்னுடைய தாயார் 1982 ஆம் ஆண்டு காலமானார். 1977 ஆம் ஆண்டு இரண்டாம் பிரதிவாதி அரிநாத், மூன்றாம் பிரதிவாதி ரமேஷ்பாபு, வாதி பிரேமா, எட்டாம் பிரதிவாதி வைஜெயந்திமாலா, பத்தாம் பிரதிவாதி ஸ்ரீலதா, நான்காம் பிரதிவாதி அமர்நாத் மற்றும் ஒன்பதாம் பிரதிவாதி சந்திரா ஆகியோர் திருமாணம் ஆகாமல் இருந்தனர் என்றால் சரிதான். 1978 ஆம் ஆண்டு எட்டாம் பிரதிவாதி வைஜெயந்திமாலாவிற்கு திருமணம் நடைபெற்றது. அந்த சமயம் சொத்து எதையாவது தந்தை விட்டாரா என்றால் இல்லை. 1980 ஆம் ஆண்டு மூன்றாம் பிரதிவாதி ரமேஷ் பாபுவிற்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமணத்தின் போது தந்தை சொத்துக்களை விட்டாரா என்றால் இல்லை. அந்த காலகட்டத்தில் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தந்தைக்கு அது தொடர்பாக நெருக்கடி இருந்தது. தந்தை அனைவரது திருமணத்திற்கும் செலவு செய்திருந்தார் என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதியின் திருமணத்திற்கு எந்த ஒரு செலவையும் அவர் செய்யவில்லை என்றும் மூன்றாம் பிரதிவாதி தான் அனைத்து செலவுகளையும் செய்தார் என்றால்

சரிதான். ஆனால் திருமணத்திற்கு பிறகு அந்த திருமண செலவினை மூன்றாம் பிரதிவாதியிடம் என்னுடைய தந்தை கொடுத்துவிட்டார். மூன்றாம் பிரதிவாதியின் திருமணத்தின் போது மூன்றாம் பிரதிவாதியின் மனைவிக்கு என்னுடைய தந்தை ஐந்து சவரன் நகை அணிவித்தார். மார்ச் மாதம் 1982 ஆம் ஆண்டு என்னுடைய தாயார் காலமானார். ஜூலை மாதம் 1982 ஆம் ஆண்டு தந்தை சொத்துக்களை விற்றார். மூன்றாம் பிரதிவாதி அவருடைய படிப்பை முடித்தவுடன் பம்பாய்க்கு சென்றார் என்றும் அங்கிருந்து அவர் மாதா மாதம் அவருடைய பெற்றோருக்கு பணம் அனுப்பி வந்தார் என்றால் சரிதான். முதலில் மாதா மாதம் ரூபாய் 100 அனுப்பி வந்தார் அதன் பிறகு சில காலம் மாதம் ரூபாய் 200 அனுப்பி வந்தார் இறுதியாக தந்தையின் கடைசி காலம் வரை ரூபாய் 300 அனுப்பி வந்தார். 1977 ஆம் ஆண்டு தந்தை ரூபாய் 2000 கடனாக பெற்று இருந்தார் என்றால் சரிதான். அதனை தீர்ப்பதற்காகத்தான் ஒரு சொத்தை தந்தை விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. நகைகளை தான் விற்பனை செய்தார். 1978 ஆம் ஆண்டு மூன்றாம் பிரதிவாதி சூரத்தில் இருந்து சேலை பிசினஸ் செய்வது தொடர்பாக சேலைகளை அங்கிருந்து வாங்கி என்னுடைய தந்தையிடம் கொடுத்து வந்தார் என்றால் சரிதான். அதுபோன்று குடும்பத் தொழிலை மூன்றாம் பிரதிவாதி விருத்தி அடைய செய்தேன் என்றால் சரிதான். ஆனால் ரூபாய் ஐந்தாயிரத்திற்கு தான் மூன்றாம் பிரதிவாதி முதலீடு செய்திருந்தார். அந்தத் தொகையை என்னுடைய தந்தை மூன்றாம் பிரதிவாதியிடம் திருப்பி செலுத்திவிட்டார். 1982 ஆம் ஆண்டு ஒன்பதாம் பிரதிவாதி சந்திராவின் திருமணத்திற்காக வேண்டி குடும்ப சொத்தில் ஒன்றரை ஏக்கர் இடத்தை ரூபாய் 15,000/–

வேண்டி கிரையம் செய்து கொடுத்து திருமண செலவு செய்தார் என்றால் தவறாகும்.

**<u>(சாட்சி மூன்றாம் பிரதிவாதி கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் தேவையில்லாத அவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மனதில் கொண்டு தேவையில்லாத பதில்களை சொல்லி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றார் சாட்சியை பலமுறை எச்சரித்தும் அவருடைய போக்கை மாற்றிக் கொள்ளாமல் நடந்து வருகின்றார்)</u>**

என்னுடைய திருமணம் 1985 ஆம் ஆண்டு நடைபெற்றது. பத்தாம் பிரதிவாதி ஸ்ரீலதாவின் திருமணத்திற்காக வேண்டி தந்தை இடத்தை விற்பனை செய்து அதற்கான பணத்தை திருமண செலவாக செய்தார் என்றால் சரிதான். மேலும் திருமண செலவுக்கு அவருடைய சகோதரர்கள் செலவு செய்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான்காம் பிரதிவாதி அமர்நாத்திற்கு 1987 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அவருடைய திருமணத்திற்கு சொத்து எதையும் என்னுடைய தந்தை விற்பனை செய்யவில்லை ஆனால் நகைகளை விற்பனை செய்து திருமணத்தை நடத்தி வைத்தார். அதுபோல் ஐந்தாம் பிரதிவாதி ஆனந்த குமாரின் திருமணத்திற்காகவும் சொத்துக்களை விற்பனை செய்து திருமணத்தை நடத்தி வைத்தார் என்றால் சாட்சி பதிலளிக்காமல் அமைதியாக இருந்து வருகின்றார். சாட்சி தற்போது ஐந்தாம் பிரதிவாதி ஆனந்த் அவருடைய திருமணத்தை அவரே செலவு செய்து நடத்திக் கொண்டார் என்று சொல்கிறார். ஆண் வாரிசுகள் அனைவரும்

அவர்களுடைய திருமணங்களை அவர்கள் தான் செலவு செய்து நடத்தினார்கள் என்றால் சரிதான்.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்